ශ්‍රී ලංකා විභාග අයිතිය]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**இலங்கை அதிபர் சேவையின் 2 ஆம் வகுப்பு உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை - 2017 (2018)**

Efficiency Bar Examination for Officers in Class 2 in Sri Lanka Principals Service - 2017 (2018)

**(01) பாடசாலை நிருவாகம் மற்றும் மேற்பார்வை**
School Administration and Supervision

**மூன்று மணித்தியாலங்கள்**
Three hours

**முதலாம்** வினா உட்பட **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

**1.** கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் **சுருக்கமாக விடை** எழுதுக.

(i) பாடசாலை ஒன்றின் நேர அட்டவணையைத் தயாரிக்கும்போது தகவல்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய **நான்கு** பகுதியினரைப் பெயரிடுக.

(ii) தரம் 10 இற்குரிய பாடமொன்றைக் கற்பிப்பதற்காக ஆசிரியர் ஒருவரைத் தெரிவுசெய்யும்போது அதிபர் என்ற வகையில் நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய நான்கு முக்கிய விடயங்களைக் குறிப்பிடுக.

(iii) அதிபரைத் தவிர பாடசாலை அபிவிருத்திக் குழுவிற்கு நியமிக்கப்படும் **நான்கு** உறுப்பினர்களின் குழுக்களைப் பெயரிடுக.

(iv) பாடசாலைப் பெறுகைக் குழுவினால் அங்கீகாரம் செய்யப்படும் நிதியில் மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவின் வகைகள் **நான்கைக்** குறிப்பிடுக.

(v) பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தியானது பாடசாலைக்கு அனுகூலமாக அமைவதற்கான காரணங்கள் **இரண்டை** எழுதுக.

(vi) உள்ளக மதிப்பீட்டிற்காக அதிபர் ஈடுபடுத்தக்கூடிய மதிப்பீட்டாளர்கள் **நால்வரைக்** குறிப்பிடுக.

(vii) பாடசாலையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக வெளிச் சமூகத்தினரை தொடர்புபடுத்தக்கூடிய **நான்கு** சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.

(viii) அதிபர் ஒருவரிடம் காணப்படவேண்டிய முகாமைத்துவப் பண்புகள் **நான்கைப்** பெயரிடுக.

(ix) பாடசாலை தொடர்பாக பழைய மாணவர்களிடையே உருவாக்கப்படவேண்டிய மனப்பாங்கு விருத்திக்காக அதிபர் ஒருவர் மேற்கொள்ளத்தக்க **நான்கு** செயற்பாடுகளைக் குறிப்பிடுக.

(x) ஆரம்ப கல்வியின் நிலைகள் **மூன்றிற்கும்** இடைநிலைக் கல்வியின் **இரண்டு** நிலைகளுக்கும் உரிய வகுப்புகளை வெவ்வேறாகப் பெயரிடுக.

*(04 × 10 = 40 புள்ளிகள்)*

**2.** (i) பாடசாலை மட்ட முகாமைத்துவத்தின் முக்கிய குறிக்கோள்கள் **ஐந்தைச்** சுருக்கமாக விளக்குக.

(ii) பாடசாலை அபிவிருத்திக்குழுவிடம் ஒப்படைக்கப்படும் பிரதான விடயங்கள் **ஐந்தைக்** குறிப்பிடுக.

(iii) பாடசாலை அபிவிருத்திக்குழு உறுப்பினர் ஒருவரினது பதவி **செல்லுபடியாகாது** போகும் சந்தர்ப்பங்களைத் தெளிவாகக் குறிப்பிடுக.

*(15 புள்ளிகள்)*

**3.** (i) புதிய பாடதிட்டங்களுக்கேற்ப 10-11 ஆந் தர மாணவர்கள் பாடசாலைகளில் கற்கக்கூடிய **ஆறு** பிரதான மையப் பாடங்களைக் குறிப்பிடுக.

(ii) 2016 ஆம் ஆண்டில் இருந்து 12 ஆந் தரத்திற்கு அனுமதிப்பதற்கு, மாணவன் ஒருவன் க.பொ.த. (சாதாரண தரத்தில்) குறைந்தபட்சம் பெற்றுக் கொள்ளவேண்டிய சித்தி நிலையைத் தெளிவாகக் குறிப்பிடுக.

(iii) பாடசாலை நேர அட்டவணையைத் தயாரிக்கும்போது அதனை நியமமான தரத்தில் பாதுகாத்துக் கொள்வதற்காக அதிபரினால் மேற்கொள்ளத்தக்க படிமுறைகளைச் சுருக்கமாக குறிப்பிடுக.

*(15 புள்ளிகள்)*

[பக் 2 ஐப் பார்க்க.

4. (i) செயற்றிட்ட நடைமுறைகளின்போது காணத்தக்க பிரதான **ஆறு** படிமுறைகளை ஒழுங்குமுறையில் குறிப்பிடுக.

(ii) செயற்றிட்டத்தை எழுதும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய **ஆறு** விடயங்களைக் குறிப்பிடுக.

(iii) செயற்திட்ட முகாமைத்துவத்தின்போது அதிபர் என்ற வகையில் உங்களுக்குள்ள கடமைகளைச் சுருக்கமாக விளக்குக.

*(15 புள்ளிகள்)*

5. (i) திருப்திகரமான ஆசிரியர் குழாம் இருக்கும் பாடசாலையிலே வினைத்திறனை உயர்மட்டத்திலே பேணிவருவதற்கு உதவத்தக்க முறையைத் தெளிவுபடுத்துக.

(ii) திருப்திகரமான ஆசிரியர் குழாம் ஒன்றை ஏற்படுத்திக் கொள்வதற்கு அதிபர் என்ற வகையில் உம்மால் மேற்கொள்ளத்தக்க செயல்முறைகள் **ஐந்தை** விபரிக்குக.

(iii) ஆசிரியர் நலனோம்பு வசதிக்காக உமது பாடசாலையிலே செயற்படுத்தப்படும் செயல்முறைகள் **ஐந்தை** விபரிக்குக.

*(15 புள்ளிகள்)*

6. (i) சமூக அபிவிருத்திக்காக பாடசாலை பங்களிக்கத்தக்க முறைகள் **ஐந்தைச்** சுருக்கமாக விபரிக்குக.

(ii) பொருட் பதிவேட்டு புத்தகத்தில் உள்ளடக்கப்படவேண்டிய பொருட்கள் பாடசாலைக்கு கிடைக்கும் வளங்கள் **நான்கைக்** குறிப்பிடுக. அவ்வாறு கிடைக்கப்பெறும் பொருட்களை பொருட் பதிவேட்டில் உள்ளடக்கும்போது குறிப்பிடப்பட வேண்டிய விடயங்கள் யாவை?

(iii) வருடாந்தம் பொருட் பதிவேட்டுப் புத்தகத்தை சமப்படுத்தல் செய்யப்படும் முறையை விபரிக்குக. பயன்படுத்த முடியாதது என சேதமடைந்து ஒதுக்கி உள்ள மரப்பொருட்களை பொருட் பதிவேட்டில் இருந்து அப்புறப்படுத்துவதற்காக எடுக்கவேண்டிய செயல்முறைகளைச் சுருக்கமாக விபரிக்குக.

*(15 புள்ளிகள்)*

7. கீழே குறிப்பிடப்பட்ட ஒவ்வொன்றிற்கிடையேயுமான வேறுபாட்டை உதாரணம் கொண்டு விளக்குக.

(i) பாடசாலையின் உள்ளக சமூகமும் வெளிச் சமூகமும்

(ii) முறைசார் கலைத்திட்டமும் மறைகலைத்திட்டமும்

(iii) பாடசாலையின் முறைசார் தொடர்பாடல் காரணிகள் மற்றும் முறைசாரா தொடர்பாடல் காரணிகள்

(iv) விசாரணையின் மூலம் தீர்மானம் எடுக்கும் பாங்கு மற்றும் பங்குபற்றலின் மூலம் தீர்மானம் எடுக்கும் பாங்கு

(v) சிகிச்சைமுறை மேற்பார்வையும் சாதாரண மேற்பார்வையும்

*(15 புள்ளிகள்)*

* * *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது ]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**இலங்கை அதிபர் சேவையின் 2 ஆம் வகுப்பு உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை - 2017 (2018)**

Efficiency Bar Examination for Officers in Class 2 in Sri Lanka Principals Service - 2017 (2018)

**(02)** பாடசாலைத் திட்டமிடல்
School Planning

மூன்று மணித்தியாலங்கள்
Three hours

முதலாம் வினா உட்பட **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

---

**1.** பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் **சுருக்கமான விடை** எழுதுக.

(i) பாடசாலையின் வருடாந்த செயற்பாடுகளின் திட்டமிடல் ஒரு வருடத்திற்காக மட்டும் அமைவதோடு அவற்றுள் விபரமாக அடங்கியிருக்கவேண்டிய **நான்கு** விடயங்களை எழுதுக.

(ii) செயற்றிட்டமொன்றின் குறிக்கோள்களை எழுதும்போது குறிக்கோள்களில் இருக்கவேண்டியது என ஏற்றுக்கொள்ளப்படும் விசேட பண்புகள் **நான்கை** எழுதுக.

(iii) பாடசாலைத் திட்டமிடும் செயல்முறையின் பிரதான படிமுறைகள் **நான்கை** எழுதுக.

(iv) கல்வித் துறை அபிவிருத்தி சட்டகம் மற்றும் வேலைத் திட்டத்தின் கீழே (ESDFP) முதலாவது கருப்பொருளான பிள்ளைகளுக்கு ஆரம்ப மற்றும் இடை நிலைக் கல்வியில் சம சாதாரண சந்தர்ப்பத்தை வழங்கும் நோக்குடன் அரசினால் அபிவிருத்திக்காக எடுக்கப்படும் படிமுறைகள் **நான்கைக்** குறிப்பிடுக.

(v) கல்வித்துறை அபிவிருத்திச் சட்டகம் மற்றும் வேலைத்திட்டத்தின் கீழே அறிமுகஞ் செய்யப்பட்டுள்ள

(அ) மூன்றாவது கருப்பொருள் என்ன?

(ஆ) அந்தக் கருப்பொருளின் கீழே செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் செயற்பாடுகள் **இரண்டை** எழுதுக.

(vi) இலங்கையின் கல்விக் கொள்கையை விளக்கும் அரசினது உத்தியோகபூர்வ வெளியீடு யாது?

(vii) சிறந்த மனித தொடர்பு வேலைத்திட்டத்தைச் செயற்படுத்தும் நோக்கிலே பாடசாலை அபிவிருத்தி திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு செயற்படுத்தக்கூடிய செயற்றிட்டங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(viii) பாடசாலை அபிவிருத்தித் திட்டமொன்றைத் தயாரிக்கும்போது "சூழ்நிலைப் பகுப்பாய்வு" தொடர்பில் ஆவணங்களை பரிசோதிக்கும் போது கண்டுபிடிக்கத்தக்க பிரதான காரணிகள் **நான்கை** எழுதுக.

(ix) கல்வித் திட்டமிடல் தொடர்பாக இலங்கை கல்வி அமைச்சினது பிரதான கடமைகள் **நான்கை** எழுதுக.

(x) "இணைப்பாடவிதான செயற்பாடு" களுக்கு உரிய செயற்றிட்டத்தை, பாடசாலை அபிவிருத்தி திட்டமிடலில் உள்ளடக்கப்பட்டு செயற்படுத்துவதனால் பிள்ளைகளுக்கு ஏற்படும் **நான்கு** நன்மைகளை எழுதுக.

*(04 × 10 = 40 புள்ளிகள்)*

**2.** (i) "பாடசாலை மட்ட திட்டமிடலைச் செயற்படுத்தும்போது பாடசாலை அதிகாரிகள் முகங்கொடுக்கும் சவால்களுக்கு திருப்திகரமாக முகங்கொடுப்பதற்கு தமது செயல்களை நிறைவேற்றுவதன் மூலம் தமது முன்னேற்றம் தொடர்பாகத் திருப்தியடையமுடியும்."

இந்தக் கூற்றை நிரூபிப்பதற்கு உரிய விடயங்கள் **இரண்டைத்** தெளிவுபடுத்துக.

(ii) 'பாடசாலை மட்டத் திட்டமிடல்' கல்வி அமைச்சரினால் பாடசாலை முறைமைக்கு அறிமுகஞ் செய்வதற்கு இரு தசாப்தங்கள் வரையிலான காலம் எடுத்திருப்பினும் இன்னமும் சரியான செயன்முறையின் மீது பாடசாலைத் திட்டமிடலை செயற்படுத்துவதாகத் தெரியவில்லை. அவ்வாறு இருப்பதற்கு காரணமாக நீர் காணத்தக்க விடயங்கள் **மூன்றைத்** தெளிவுபடுத்துக.

(iii) (அ) பாடசாலை திட்டமிடலில் உள்ளடக்கப்பட்டு செயற்படுத்தக்கூடிய நீர் விரும்பிய வேலைத்திட்டங்கள் **இரண்டை** எழுதி, அவை ஒவ்வொன்றின் கீழேயும் செயற்படுத்தக்கூடிய செயற்றிட்டம் ஒன்று வீதம் குறிப்பிடுக.

(ஆ) அதில் ஒரு செயற்றிட்டத்தில் அடங்கியிருக்கவேண்டிய அடிப்படைப் பண்புகள் **நான்கை** எழுதுக.

*(15 புள்ளிகள்)*

[பக் 2 ஐப் பார்க்க.

3. (i) பாடசாலைத் திட்டங்களைத் தயாரிக்கும்போதும் அந்தப் பாடசாலையின் குறிக்கோள்களை நிறைவேற்றும் பொருட்டும் அந்த திட்டமிடல் வேலைத்திட்டம் மற்றும் செயற்றிட்டத்தை இலக்காக கொள்ள வேண்டும். பாடசாலையின் குறிக்கோள்களைத் தீர்மானிக்கும்போது தாக்கத்தை ஏற்படுத்தும் காரணிகள் **மூன்றை** எழுதுக.

(ii) "பாடசாலைகளின் குறிக்கோள்கள் பாடசாலைக்கு பாடசாலை வேறுபடும்" இதற்கான காரணங்கள் **இரண்டை** விளக்குக.

(iii) பாடசாலையின் "தொலைநோக்கு (Vision)" மற்றும் "பணிக்கூற்று (Mission)" என்பவற்றிற்கிடையேயுள்ள தொடர்பைச் சுருக்கமாக விளக்குக.

*(15 புள்ளிகள்)*

4. (i) பாடசாலைத் திட்டங்களைத் திட்டமிடும்போது அதிகாரிகள் பரீட்சைப் பெறுபேறுகளை விருத்தி செய்வதற்கான வேலைத்திட்டங்களை மட்டும் மட்டுப்படுத்தக்கூடாது. இணைந்த திட்டமொன்றை தயாரிக்கும்போது பாடசாலை அதிகாரிகள் கவனத்தைச் செலுத்த வேண்டிய வேறு துறைகள் **ஐந்தை** எழுதுக.

(ii) இலங்கையின் கல்விப் புலத்தினுள் விருத்தி செய்துகொள்ளவேண்டியதென காட்டப்பட்டுள்ள ஒரு தேர்ச்சி, "மாணவர்கள் விளையாட்டு மற்றும் ஓய்வைப் பயனுள்ளதாக செலவழிப்பதற்கு பயிற்றுவிக்கும் தேர்ச்சியாகும்."

(அ) மேற்குறித்த தேர்ச்சியை மாணவர்கள் பின்பற்றும் நோக்கில் பாடசாலை அபிவிருத்தித் திட்டமிடலில் உள்ளடக்கக்கூடிய வேலைத்திட்டங்கள் **இரண்டைப்** பெயரிடுக.

(ஆ) அவற்றுள் **ஒரு** வேலைத்திட்டத்தின் கீழே செயற்படுத்தக்கூடிய செயற்றிட்டங்கள் **இரண்டைச்** சுருக்கமாக விளக்குக.

(இ) மேற்குறித்த தேர்ச்சியைத் தவிர, இலங்கையின் கல்வி முறைமையில் மாணவர்களிடம் விருத்தி செய்து கொள்ள வேண்டியதென குறிப்பிடப்பட்டுள்ள **மூன்று** தேர்ச்சிகளை எழுதுக.

*(15 புள்ளிகள்)*

5. (i) பாடசாலைகளில் "கல்வி முகாமைத்துவ தகவல் முறைமை (Education Management Information System)" இனை இற்றைப்படுத்தி பேணிச் செல்லும் கல்வியிலே பண்பு விருத்தி காரணமாக அவற்றைக் கீழே தரப்பட்ட தலைப்புகளின் கீழே விளக்குக.

(அ) தேசிய பரீட்சைப் பெறுபேற்றை வருடாந்தம் இற்றைப்படுத்தி பேணிவருதல்

(ஆ) பௌதிக வளங்கள் தொடர்பாக தகவல்களை இற்றைப்படுத்தி பேணிவருதல்

(ii) பாடசாலை அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழே அறிமுகஞ் செய்யப்பட்டுள்ள

(அ) பாடசாலை அபிவிருத்தி குழு

(ஆ) பாடசாலை முகாமைத்துவ குழு

(இ) பாடசாலை அபிவிருத்தி திட்டமிடல்

என்பவற்றிற்கிடையிலான தொடர்புகள் எவ்வகையானது என விளக்குக.

(iii) "கல்வி முகாமைத்துவ தகவல் முறைமை" உட்பட பாடசாலையில் செயற்படுத்தும் பாடவிதானம் தொடர்பான தகவல், பாடசாலை பாடவிதான அபிவிருத்தியை அடிப்படையாக கொள்ளக்கூடிய முறையை விளக்குக.

*(15 புள்ளிகள்)*

6. (i) பாடசாலையின் "மூலதனச் சொத்துகள் முகாமைத்துவ திட்டமிடல்" என்பதனால் கருதப்படுவது என்னவென்பதை சுருக்கமாக விளக்குக.

(ii) பாடசாலை அபிவிருத்தி திட்டத்தை தயாரிக்கும் பாடசாலை அபிவிருத்தி குழுவின் செயற்பாடு திருப்தியாக அமையாத சந்தர்ப்பத்திலே வலயக் கல்விப் பணிப்பாளர் மேற்கொள்ளத்தக்க படிமுறைகள் **மூன்றை** எழுதுக.

(iii) பாடசாலையில் வருடாந்தம் செயற்படுத்தும் திட்டம் மற்றும் இடைக்காலத் திட்டத்தைத் தயார் செய்து அமுல்படுத்தும்போது பாடசாலையிலே பேணிவரவேண்டிய முக்கிய ஆவணங்கள் **ஐந்தை** எழுதுக.

*(15 புள்ளிகள்)*

7. கீழே தரப்பட்ட விடயங்கள் ஒவ்வொன்றிடையேயும் காணப்படும் தொடர்பைச் சுருக்கமாக விளக்குக.

(i) பாடசாலையின் சூழ்நிலைப் பகுப்பாய்வு மற்றும் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை கொடுத்தல்

(ii) பாடசாலை அபிவிருத்திக்கு மூலதனச் செலவு மற்றும் மீண்டெழும் செலவினம்

(iii) திட்டமிடல் மற்றும் முன்திட்டமிடல்

(iv) பாடசாலை அபிவிருத்திக்குழு மற்றும் உபகுழு

(v) பாடசாலை அபிவிருத்தி திட்டம் மற்றும் பாடசாலை வருடாந்த செயலாற்றுகை அறிக்கை (School Annual Performance Report)

*(03 × 5 = 15 புள்ளிகள்)*

***

ශ්‍රී ලංකා ශ්‍රී ලංකා [සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**இலங்கை அதிபர் சேவையின் 2 ஆம் வகுப்பு உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை - 2017 (2018)**

Efficiency Bar Examination for Officers in Class 2 in Sri Lanka Principals Service - 2017 (2018)

**(03) கல்வியின் நவீன போக்குகள் மற்றும் நடைமுறைகள்**

Modern Trends and Practices Education

**மூன்று மணித்தியாலங்கள்**
Three hours

முதலாம் வினா உட்பட **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

**1.** கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் **சுருக்கமான விடை** எழுதுக.

(i) கல்வி அமைச்சு மற்றும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் தேசிய கல்வி ஆய்வு மற்றும் மதிப்பீட்டு மையத்தின் (NEREC) மூலம் தரம் 4 மாணவர்களின் கற்றல் அடைவு மட்டத்தை அளவிடுவதற்காக நடாத்தப்படுகின்ற தேசிய மதிப்பீட்டுக்குட்படும் பாடங்கள் **மூன்றைப்** பெயரிடுக.

(ii) கல்வி அமைச்சு மற்றும் கொழும்பு பல்கலைக்கழகத்தினது தேசிய கல்வி ஆய்வு மற்றும் மதிப்பீட்டு மையம் மூலம் தரம் 8 மாணவர்களின் கற்றல் எதிர்பார்க்கை மட்டத்தை அளவிடுவதற்காக நடாத்தப்படுகின்ற தேசிய மதிப்பீட்டு எண்ணிக்கைக்குரிய பாடங்கள் **மூன்றைப்** பெயரிடுக.

(iii) நிலைத்து நிற்கும் அபிவிருத்தி நோக்கங்களுள் (Sustainable Development Goals) நேரடியாக கல்வியுடன் தொடர்புபட்டது எத்தனையாவது நோக்கமாகும்? அதனைப் பெயரிடுக.

(iv) அதிபராகச் செயற்படும்போது பாடசாலைத் தலைமைத்துவம் மற்றும் முகாமைத்துவ தேர்ச்சிகளாக அடையவேண்டிய **இரண்டு** பிரதானமான தேர்ச்சி புலங்களைக் (Competency Domain) குறிப்பிடுக.

(v) கல்வி செயலாளரினது 23/2017 ஆம் இலக்க மற்றும் 2017.06.01 ஆந் திகதியிடப்பட்ட பாடசாலை மட்ட கணிப்பீடு (SBA) ஆனது 2017 ஆம் ஆண்டும் அதன்பின்னரும் செயற்படுத்தப்படுவது எந்த தரங்களுக்கும் எந்தப் பாடங்களுக்கும் ஆகும்?

(vi) கல்விக்காக சமசந்தர்ப்பம் மற்றும் பங்கு கொள்ளலை உயர்த்துதல் மற்றும் இலவச கல்விக் கொள்கையை உறுதி செய்யும் நோக்குடன் பௌதிக மற்றும் ஏனைய கல்வி வளங்களை வழங்குவதற்காக அரசினால் 2015 ஆம் ஆண்டில் இருந்து பாரிய செயற்றிட்டமொன்று செயற்படுத்தப்படுகிறது. அந்த செயற்றிட்டம் என்ன?

(vii) இலவசக் கல்விக் கொள்கையை உறுதி செய்யும் வகையில் மாணவர்களினது உடல் ஆரோக்கியத்தை பாதுகாப்பதற்கு 2017 ஆம் ஆண்டிலிருந்து அரசு செயற்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள முக்கியமான தேசிய வேலைத் திட்டமொன்றைப் பெயரிடுக.

(viii) கல்விச் செயலாளரினால் 7/2013 ஆம் இலக்க சுற்று நிருபத்திற்கேற்ப பாடசாலை அபிவிருத்திக்குழு கொண்டுள்ள இணைப்பு குழுக்கள் **ஐந்தைப்** பெயரிடுக.

(ix) "சமூக இணைப்பு மற்றும் ஒருங்கிணைப்பு" என்ற நிலையான அபிவிருத்தியைப் பேணிச் செல்வது குறுங்காலத்தில் விரைவாக செய்யக்கூடிய செயல் ஒன்றல்ல". அதில் பாரிய மனப்பாங்கு மாற்றமொன்றைச் செய்யவேண்டும். இது தொடர்பாக அரசினால் கொண்டுவரப்பட்ட படிமுறைகள் **மூன்றைப்** பெயரிடுக.

(x) கல்வி அபிவிருத்தி திட்டமிடலிலே தற்போது கடைப்பிடிக்கப்படுகின்ற அணுகுமுறை (Approach) யாது?

*(04 × 10 = 40 புள்ளிகள்)*

**2.** கல்வி மறுசீரமைப்பு ஆலோசனையின் கீழே 13 ஆம் வருடத்திலே உறுதி செய்யப்பட்ட கல்விக் கொள்கையின் கீழே 12 மற்றும் 13 ஆந் தரத்திற்காக தொழில்சார் பாடத்துறையொன்று அறிமுகஞ் செய்யப்பட்டது. 2017 ஆம் ஆண்டிலே இந்த வேலைத்திட்டம் உத்தேசிக்கப்பட்ட வேலைத்திட்டமொன்றாக அறிமுகப்படுத்தப்படுகிறது.

(i) இந்த வேலைத்திட்டத்தை செயற்படுத்துவதனூடாக மாணவர்களுக்கு கல்விப்புலத்திலே கிடைக்கும் முக்கிய நன்மைகள் எவை என்பதைச் சுருக்கமாக விளக்குக. *(08 புள்ளிகள்)*

(ii) இந்த வேலையைத் திருப்திகரமாக்கிக் கொள்வதற்கு நீர் முன்வைக்கும் ஆலோசனைகள் **மூன்றைச்** சுருக்கமாக விளக்குக. *(07 புள்ளிகள்)*

[பக் 2 ஐப் பார்க்க.

**3.** கல்விச் செயலாளரினது 07/2013 ஆம் இலக்க சுற்றுநிருபத்தினூடாக பாடசாலை மட்ட பண்புகள் போதுமானதாகவும் கட்டமைக்கப்பட்டதுமான அபிவிருத்திக்காக திட்டமிடல் மற்றும் கொள்ளல் தொடர்பான அதிகாரங்கள் சில பாடசாலைகளிடம் பரவல்படுத்தப்பட்டுள்ளன.

(i) பாடசாலை முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி தொடர்பாக மேற்குறித்த சுற்றுநிருபத்திற்கு ஏற்ப பாடசாலைகளில் செயற்படுத்தப்படும் முக்கிய குழுக்கள் **இரண்டைப்** பெயரிடுக. *(05 புள்ளிகள்)*

(ii) இந்த சுற்றுநிருபத்தினூடாக மாணவர்களின் கற்றல் எதிர்பார்க்கை மட்டத்தினை உயர்த்துவதற்கு உரியதாக கிடைக்கும் முக்கிய பயன்பாடுகள் **மூன்றைச்** சுருக்கமாக விளக்குக. *(10 புள்ளிகள்)*

**4.** மாணவர் கற்றல் எதிர்பார்க்கை மட்டத்தை அளப்பதற்காக உலகிலே அதிகளவிலான நாடுகள் சர்வதேச மதிப்பீட்டில் (International Assessment) பங்கு கொள்ளும்.

(i) அவ்வகையான சர்வதேச மதிப்பீடுகள் **இரண்டைப்** பெயரிடுக. *(06 புள்ளிகள்)*

(ii) இவ்வகையான சர்வதேச மதிப்பீட்டிற்காக கலந்து கொள்வதன் ஊடாக கல்வியின் பண்பு விருத்திக்காக பெற்றுக் கொள்ளக்கூடிய முக்கிய பயன்கள் **மூன்றைச்** சுருக்கமாக விளக்குக. *(09 புள்ளிகள்)*

**5.** கல்வி கைப்பற்றுகைக்காக கல்வியின் பண்பு அபிவிருத்திக்காக பெற்றுக் கொள்ளக்கூடிய இணைப்பு, மேற்பார்வை, மற்றும் மிதப்படுத்துதல் போன்றன முக்கிய கருவிகளாகும்.

(i) புதிய கல்வி மறுசீரமைப்பு யோசனையின் கீழே செயற்படுத்துவதற்கு உத்தேசித்துள்ள "சுய பாடசாலை மேற்பார்வை சேவை / சபை" யின் கீழே கைப்பற்றிக் கொள்ளக்கூடிய பிரயோசனங்கள் **மூன்றை** சுருக்கமாக விளக்குக. *(06 புள்ளிகள்)*

(ii) இந்த வேலைத்திட்டத்தை திருப்திகரமாக செயற்படுத்துவதற்காக கல்விப் புலத்தினுள் விரைவாக செயற்படுத்தக்கூடிய மாற்றங்கள் / மீள் அழைப்புகளை சுருக்கமாக விளக்குக. *(09 புள்ளிகள்)*

**6.** பாடசாலை முறைமையினுள் இதுவரை அமுல்படுத்தப்பட்ட "பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி (School-based Teacher Development)" வேலைத்திட்டத்தை மேம்படுத்தக்கூடிய படிவமாக 2018 ஆம் ஆண்டில் இருந்து "பாடசாலை மட்ட தொழில்சார் ஆசிரியர் அபிவிருத்தி (School-based Professional Teacher Development)" வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படும்.

(i) பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி வேலைத்திட்டத்தை பாடசாலைகளில் செயற்படுத்தும்போது நீர் முகங் கொடுக்கும் பிரதான பிரசினங்கள் **மூன்றை** சுருக்கமாக விளக்குக. *(06 புள்ளிகள்)*

(ii) பாடசாலைமட்ட தொழில்சார் ஆசிரியர் அபிவிருத்தி வேலைத்திட்டத்தை பாடசாலை மட்டத்திலே திருப்தியாக செயற்படுத்துவதற்காக நீர் முன்வைக்கும் கட்டுருவாக்க ரீதியான ஆலோசனைகள் **மூன்றை** சுருக்கமாக விளக்குக. *(09 புள்ளிகள்)*

**7.** பாடசாலை மட்டத்திலே தகவல் தொழில்நுட்ப பாடத்தை விருத்தி செய்யவும் மற்றும் அந்த பாடத்தை பயிலுவதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்துவதற்கும் மாணவர்களின் அறிவை அதிகரிப்பதற்காக புதிய கல்வி மறுசீரமைப்பின் கீழே e -வாசிகசாலை (e - libraries) நிறுவுவதற்கு ஆலோசிக்கப்பட்டுள்ளது.

(i) e-வாசிகசாலையை விருத்தி செய்வதன் மூலம் மாணவர்களினது கற்றலினை உயர்த்துவதற்கு உதவத்தக்க சிறந்த காரணிகள் / பயன்பாடுகள் **மூன்றைப்** பெயரிடுக. *(06 புள்ளிகள்)*

(ii) இந்த யோசனை தொடர்பாக ஏற்படக்கூடிய **பாதகமான** தாக்கத்தை குறைத்துக் கொள்வதற்கு எடுக்கத்தக்க படிமுறைகள் எவை? *(09 புள்ளிகள்)*

* * *